| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சிவசண்முகம் வீதி, பச்சமலை ரோடு, சங்கரன் வீதி, சரவணா தியேட்டர் ரோடு குறுக்கு சந்து, கோடீஸ்வரன் நகர், ராமர் எக்ஸ்டென்சன் –7 பகுதிகளில் புதிய தெரு விளக்கு அமைக்க உத்தேச மதிப்பீடு | 1,00,000 |

| | | |
|---|---|---|
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வார்டு-1 ஸ்ரீராமபுரம், கிருஷ்ணா நகர், வார்டு-5 கோசலை நகர், வார்டு-6 ஆண்டவர் வீதி, வார்டு-12 பாரதி வீதி, காளியண்ணன் வீதி, Sanitary lane வார்டு-14 முத்துவேலப்பன் வீதி, வார்டு-20 நாய்க்கன் காடு பகுதிகளில் புதிய மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு | 15,00,000 |

**அலுவலகக் குறிப்பு :-** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்படி பணிகளை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1451**

44. தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு அறிவிக்கை எண்: 836. நாள் 16.12.2025 இல் தமிழகம் முழுவதும் உள்ள நகராட்சிகளில் சொத்துவரி பெயர் மாற்றக்கட்டணம் ஒரே சீராக நிர்ணயம் செய்து வெளியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் படி நகராட்சிகளுக்கு

| வரிசை எண் | குடியிருப்பு பயன்பாடு (ரூபாயில்) | பிற பயன்பாடு (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 500 | 1000 |

என சொத்துவரி பெயர் மாற்றக்கட்டணம் நிர்ணயம் செய்து ஆணை வெளியீடு செய்யப்பட்டுள்ளது மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12199/ஆர்1/2025 நாள். 24.12.2025-இல் மேற்படி அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கு வைத்திட தெரிவித்தும் உடன் நடைமுறைப்படுத்திடவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண்: 836 நாள்: 16.12.2025 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் :922/2023/அ1)

**அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.**

**அலுவலகக் குறிப்பு : பதிவுசெய்யப்பட்டது. தீர்மான எண்.1452**

45. இந்நகராட்சிக்கு சொந்தமான IUDP வாரச்சந்தை வணிகவளாக கடை எண் 21- ன் குத்தகைதாரர் திருமதி. ஆர். தனபாக்கியம் என்பவரால் (057/550) வாடகை தொகை ரூ.4,08,785/- செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. மேற்படியாரிடம் வாடகை செலுத்தக்கோரி நேரில் பலமுறை அறிவுறுத்தப்பட்டும் அறிவிப்புகள் பல வழங்கப்பட்டிருந்தும் மேற்படி குத்தகைதாரரால் வாடகை செலுத்தப்படாத காரணத்தினால் IUDP வாரச்சந்தை வணிக வளாக கடை எண் 21 ஐ 26.12.2025 அன்று பூட்டி சீல் வைத்து நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி குத்தகைதாரர் மீது நிலுவை வாடகை வசூலிப்பது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கீழ்கண்ட விபரப்படி மேற்படி கடையின் 2025-2026 நிதியாண்டில் 01.01.2026 முதல் 31.03.2026 வரை ஏற்கவே எழுப்பபட்ட கேட்பினை நீக்கம் செய்யவும் நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 3060/2016/அ3)

| வரிவிதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | நீக்கம் செய்ய வேண்டிய மாதம் முதல்/ முடிய | தொகை ரூ |
|---|---|---|---|
| 057/550 | ஆர். தனபாக்கியம் | ஜனவரி 2026 முதல் மார்ச் 2026 வரை | 15,792/- |

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1453**

46. இந்நகராட்சிக்கு சொந்தமான MUDF பழைய பேருந்து நிலைய வணிக வளாக கடைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிய வணிக வளாக கடைகள் கட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளதால், அதன் பின்னிட்டு நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளப்பட்டு பூட்டி சீல் வைக்கப்பட்ட கடைகளை பொது ஏலம் விடுவதிலிருந்து விலக்களிக்கலாம். மேலும் கீழ்கண்ட கடைகளின் குத்தகைதாரர்கள் கடை வாடகை செலுத்தாத காரணத்தினால் 11.12.2025 அன்று கடை நகராட்சியில் பூட்டி சீல் வைத்து நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

| MUDF பழைய பேருந்து நிலையம் கடை எண்கள் | குத்தகைதாரர் பெயர் | நகராட்சி வசம் எடுத்துக் கொண்ட நாள் | 1.12.2025 முதல் 31.03.2026 வரை கேட்பு நீக்கம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 16 | 057/832<br>K.R. ராஜன் | 11.12.2025 | 19044/- |
| 18 | 057/834<br>M.P. கருப்புசாமி | 11.12.2025 | 33328/- |
| 29 | 057/845<br>K.M. முகமது அலி | 11.12.2025 | 33328/- |
| | | மொத்தம் | **ரூ 85700/-** |

எனவே மேற்கண்ட கடைகளுக்கு 1.12.2025 முதல் 31.03.2026 வரை கேட்பினை நீக்கம் செய்ய நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1454**

47. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள், சிறுவர் விளையாடுமிடம், பொது பயன்பாட்டு இடங்கள் மற்றும் திறவிடங்கள் ஆகியவற்றினை பாதுகாக்கும் பொருட்டு, பொதுமக்கள் எளிதில் அறியவும் மேற்காண் இடங்களின் வளாகத்திற்குள் "இடம் நகராட்சிக்கு சொந்தமானது "என்ற அறிவிப்பு பலகை வைக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/- ஐ, நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.441/2022/எப்1)

**அலுவலக குறிப்பு : - 1.** மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினங்களை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1455**

48. இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் சமத்துவ பொங்கல் விழா நிகழ்ச்சி 14.01.2026 ஆம் தேதியன்று நடைபெறுவதை முன்னிட்டு அதற்கு தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள பொங்கல் வைக்க தேவைப்படும் பொருட்கள் வாங்கவும், விளையாட்டு போட்டிகளுக்கு தேவையான உபகரணங்கள் அதற்குரிய பரிசு பொருட்கள் மற்றும் விழாவிற்கு தேவையான இதர பொருட்கள் வாங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .(ந.க.எண்.0013/2025/எச்1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1456**

49. ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகராட்சி (திருப்பூர் மண்டலம்) தேர்வு நிலை நகராட்சியாக உள்ளது. அரசாணை (நிலை) எண்.10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.23.01.2023 இன் படி புதிய பணியிடங்கள் நகராட்சிகளுக்கு தோற்றுவித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு மூன்று தட்டச்சர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்நகராட்சியில் மூன்று தட்டச்சர் பணியிடமும்

தொடர்ந்து காலிப்பணியிடங்களாகவே இருந்து வருகிறது. மேலும்,நகராட்சி மூலம் மாவட்ட ஆட்சியரகம், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் மற்றும் ஏனைய அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு தினந்தோறும் கடிதங்கள் கணினியில் தட்டச்சு, மின்னஞ்சல், விரிதாளில் (Google Sheet) விபரங்கள் பதிவு செய்தல், அறிக்கைகள் அனுப்பி வைத்தல், 7th SFC ஆகிய தரவுகளை பதிவற்றம் செய்யவும், நகர்மன்ற கூட்டப்பொருட்களை தட்டச்சு மூலம் பதிவு செய்யவும், மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளும் கணினி மூலமே மேற்கொள்ளப்பட்டு தட்டச்சு செய்து அனுப்பப்பட்டு வருகிறது. இது மிக முக்கியமான பணியாக உள்ளது. மேலும், தேர்தல், சத்துணவு, காலை உணவுத்திட்டம் மற்றும் அம்மா உணவகம் ஆகிய பணிகளுக்கும் தட்டச்சு பணி முக்கியமானதாக உள்ளது. தட்டச்சர் பணியிடம் மூன்று பணியிடங்கள் காலியாக உள்ளதால் மேற்குறிப்பிட்ட அலுவலக பணிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து மூன்று தட்டச்சர் பணியிடங்களுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.8077/2025/எ2 நாள்.26.05.2025 இன் மாவட்ட ஆட்சியர் அறிவிக்கையின் படி தினக்கூலி பணி ரூ.723/- என்கின்ற ஊதிய அடிப்படையில் 01.01.2026 முதல் 30.06.2026வரை தோராயமாக ஆகும் ரூ.3,50,000/- இலட்சத்திற்கு உள்ளூர் சுய உதவிக்குழு மூலம் பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.10/2025/சி1)

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1457**

50.கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30-வார்டுகளில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரில் உள்ள 10 மேல்நிலை தொட்டிக்கு தண்ணீர் ஏற்ற குடிநீர் உந்து குழாய் 17.99 கி.மீட்டர் நீளத்திற்கும் நகரில் 142 கி.மீட்டர் நீளத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட குடிநீர் விநியோக பணிகளை வெளிமுகமை முறை (Out Sourcing) மூலம் செய்திட நகர்மன்ற தீர்மானம் எண் 1369 நாள் 30.10.2025 மூலம் அனுமதி பெற்று 28.11.2025-ல் பணி உத்திரவு Mayura Environtech Private Limited, Tirupattur அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தகாலம் 31.03.2026-ம் தேதி உடன் முடிவடைகிறது. எனவே, குடிநீர் பணி அத்தியாவசியமாக உள்ளதால் தலைமை நீரேற்று நிலையத்திலும், குடிநீர் வால்வுகளை பகல் மற்றும் இரவு பணிகளில் வேலை செய்ய ஆட்கள் போதுமானதாக இல்லாததால் 01.04.2026 முதல் 30.06.2026 வரை

1. எலக்ட்ரீசியன் - 5
2. ஓட்டுநர் - 1
3. குழாய் திறப்புனர்கள் - 18

மொத்தம் - 24

மொத்தம் 24 நபர்களை அமர்த்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.18,00,000/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதனை பொதுநிதி அல்லது குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்**

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1458**

51. தற்காலிக விளம்பர பேனர்கள் மற்றும் தட்டிகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் :

கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் அமைக்கப்படும் தற்காலிக விளம்பர பேனர்கள் மற்றும் தட்டிகள் முறையான அனுமதி பெற்று 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்படியும். தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் 2023ஆம் ஆண்டு விதிகளின்படியும் அனுமதி வழங்கவும் அனுமதி இல்லாமல் விதி மீறல்கள் உள்ள விளம்பர தட்டிகள் மற்று பேனர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அரசாணை எண். 45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 12.04.2023 இல் விதிமுறைகள்

நிறுவப்பட்டுள்ளது. அதன்படி விதிமுறைகள் குறித்து இவ்வலுவலக நகர்மன்ற தீர்மான எண் 554 நாள் 25.07.2023 இன் படி மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்பட்டுள்ளது. தற்போது அதன் விதிமுறைகளில் கூடுதலாக கீழ்கண்டுள்ளவாறு நகராட்சிக்குட்பட்ட சாலைகளில் வைக்கப்படும் தற்காலிக விளம்பர பேனர்கள் மற்றும் தட்டிகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

1. விளம்பர தட்டிகள் மற்றும் பேனர்கள் வைக்க காவல்துறை ஆய்வாளர் அவர்களிடம் தடையின்மை சான்று பெற்று அதனை இணைத்து 15 நாட்களுக்கு முன்னர் நகராட்சிக்கு விண்ணப்பிக்கப்படவேண்டும்.
2. ஒவ்வொரு விளம்பர தட்டி அல்லது பேனர் வைக்க தலா ரூ.500/– செலுத்தப்படவேண்டும். அனுமதி காலம் வைத்தல் மற்றும் அகற்றுதல் சேர்த்து ஆறு நாட்கள் மட்டுமே.
3. குறைவான கால அவகாசத்தில் நகராட்சியால் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு மூன்று தினங்களுக்கு மட்டுமே வைத்தல் மற்றும் அகற்றுதல் சேர்த்து அனுமதி வழங்கப்படும்.
4. மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டையின் அதிகபட்ச அளவு கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| அட்டவணை | |
|---|---|
| **சாலை அகலம் (மீட்டரில்)** | **மின்னணுத்திரை/விளம்பர அட்டையின் அதிகபட்ச அளவு** |
| 30க்கு மேல் | 4.50 மீ (உயரம்) X 8.00 மீ(அகலம்) |
| 18 முதல் 30 வரை | 3.60மீ (உயரம்) X 6.00 மீ(அகலம்) |
| 12 முதல் 18 வரை | 3.00 மீ (உயரம்) X 4.80 மீ(அகலம்) |
| 6 முதல் 12 வரை | 2.40 மீ (உயரம்) X 1.50 மீ(அகலம்) |
| 3 முதல் 6 வரை | 1.00 மீ (உயரம்) X 0.75 மீ(அகலம்) |

5. சாலையின் மைய நிலையில் மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை எதுவும் அனுமதிக்கப்படகூடாது.
6. ஒரு குறிப்பிட்ட சாலையில் அமைக்கப்படும் மின்னணுத்திரைகள் அல்லது விளம்பர அட்டைகள் நடைமுறைக்குக் கூடிய அளவில் ஒரே அளவில் இருக்க வேண்டும்.
7. மூன்று மீட்டர் அகலத்துக்கும் குறைவான நடைபாதையைக் கொண்ட சாலையின் இருபுறமும் மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை அனுமதிக்கப்படக்கூடாது. தனி நடைபாதை இல்லாத சாலையில் பாதசாரிகள் பயன்படுத்த சாலை ஓரம் மற்றும் மின்னணுத்திரைகள் அல்லது விளம்பர அட்டைகளுக்கு இடையே குறைந்தபட்சம் மூன்று மீட்டர் அகலம் இருக்க வேண்டும்.
8. மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை நடைபாதை அல்லது சாலைக்கு இணையாக மட்டுமே அமைக்கப்படவேண்டும், நடைபாதை அல்லது சாலை ஓரத்தின் குறுக்கே அமைக்கப்படாது
9. ஒரு மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டைக்கும் மற்றொன்றுக்கும் இடையே பத்து மீட்டருக்கு குறையாத இடைவெளி இருக்க வேண்டும் ஒரு சாலையில் மின்னணுத்திரைகள் மற்றும் விளம்பர அட்டைகளுக்கு இடையே உள்ள இடைவெளிசீரான நீளத்தில் இருக்க வேண்டும்.
10. சாலையின் மொத்த அகலம் (வண்டி வழி மற்றும் நடைபாதை) மூன்று மீட்டருக்கும் குறைவாக உள்ள குறுகிய சாலைகளில் மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை அனுமதிக்கப்படாது மூன்று மீட்டர் முதல் பன்னிரெண்டு மீட்டர் வரை அகலமுள்ள சாலைகளில், சாலை ஓரத்தின் ஒரு ஓரத்தில் மட்டுமே மின்னணுத்திரைகள் அல்லது விளம்பர அட்டைகள் அனுமதிக்கப்படும். மேலும் சாலையின் அகலம் பன்னிரெண்டு மீட்டருக்கு மேல் இருந்தால், சாலை ஓரத்தின் இருபுறமும் மின்னணுத்திரைகள் அல்லது விளம்பர அட்டைகள் அனுமதிக்கப்படும்.
11. சாலை அல்லது நடைபாதையின் வண்டிப் பாதையில் மின்னணுத்திரை அல்லது விளம்பர அட்டை எதுவும் அமைக்கப்படக் கூடாது. மேலும் கிடைக்கக்கூடிய இடங்களில், இடையில் உள்ள மண் மேற்பரப்பில் மட்டுமே அமைக்கப்பட வேண்டும்.

12. அனுமதி வழங்குவதற்கான கட்டுப்பாடு:–

மின்னணுத்திரைகள் மற்றும் விளம்பர அட்டைகளை அமைப்பதற்கான அனுமதி பின்வரும் இடங்களில் வழங்கப்படாது, அதாவது

1. கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் உள்நோயாளிகள் சிகிச்சை வசதி உள்ள மருத்துவமனைகளின் முன் அனுமதி இல்லை/
2. சாலை அல்லது தெரு சந்திப்புகளின் மூலைகளில் சந்திப்புகள் மற்றும் போக்குவரத்து திட்டுகள் உட்பட சந்திப்பின் இருபுறமும் 50 மீட்டர் தூரம் வரை அனுமதி இல்லை
3. அறிவிக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள், சிலைகள் அல்லது சின்னச் சின்ன இடங்கள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் முன் அனுமதி இல்லை மற்றும்
4. அரசாங்கத்தால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் மற்ற இடங்களில் அனுமதி இல்லை

13. அனுமதி பெறப்பட்டு கூடுதலாக விளம்பர தட்டிகள் அல்லது பேனர்கள் வைக்கப்பட்டதாக பின்னர் அறியப்பட்டால் அவைகளை நகராட்சி நிர்வாகம் அகற்றி பறிமுதல் செய்வதுடன் சம்பந்தப்பட்ட நபர்களிடம் கட்டணங்கள் மற்றும் அபராத தொகை வசூலிக்கப்படும்.
14. பொதுமக்களுக்கும். போக்குவரத்திற்கும் எவ்விதமான இடையூறும் நிகழாத வகையில் விளம்பா தட்டிகள் மற்றும் பேணர்கள் வைக்கப்படவேண்டும்.

மேற்படி விளம்பர அமைப்புகள் அமைப்பது குறித்தான மேற்காணும் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1207/2023/எப்1)

**அலுவலகக்குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.**

**அலுவலகக் குறிப்பு : பதிவுசெய்யப்பட்டது தீர்மான எண்.1459**

52. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் அமைக்கப்படும் விளம்பர பலகைகள் மற்றும் தட்டிகள் முறையான அனுமதி பெற்று 1908 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்படியும், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் 2023–ஆம் ஆண்டு விதிகளின்படியும் அனுமதி வழங்கவும் அனுமதி இல்லாமல் விதி மீறல்கள் உள்ள விளம்பர பலகைகள் மற்றும் தட்டிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் அரசாணை எண் 45 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை. நாள். 1204,2023 இல் விதிமுறைகள் நிறுவப்பட்டுள்ளது. அதன்படி விதிமுறைகள் குறித்து இவ்வலுவலக நகர்மன்ற தீர்மான எண். 554, நாள். 25072023 இன் படி மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்பட்டுள்ளது. தற்போது அதன் விதிமுறைகளில் கூடுதலாக ஒற்றை சாளர ஒப்புதல் குழு விதி 320இன் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் அந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட ஒற்றை சாளர குழுவால் பரிசீலிக்கப்படும். இதில் சம்பந்தப்பட்ட நகராட்சி அதிகாரிகள் மற்றும் காவல் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத போக்குவரத்து காவல் துறை அதிகாரி உள்ளனர் மற்றும் அதன் பரிந்துரையை சம்பந்தப்பட்ட பகுதி ஆணையரிடம் சமர்பிக்கப்பட வேண்டும்.

**கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ஒற்றை சாளர ஒப்புதல் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு**

| கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஒற்றை சாளர ஒப்புதல் குழு உறுப்பினர்கள் | | |
|---|---|---|
| **வ.எண்** | **நபர்கள்** | **பதவி** |
| 1 | ஆணையாளர் | தலைவர் |
| 2 | நகரமைப்பு அலுவலர் | உறுப்பினர் |
| 3 | சுகாதார அலுவலர் | உறுப்பினர் |
| 4 | நகரமைப்பு ஆய்வாளர் 1 | உறுப்பினர் |
| 5 | நகரமைப்பு ஆய்வாளர் 2 | உறுப்பினர் |
| 6 | போக்குவரத்து காவல் ஆய்வாளர் | உறுப்பினர் |
| 7 | நகர காவல்துறை ஆய்வாளர் | உறுப்பினர் |

கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விளம்பர அமைப்புகள் அமைப்பது குறித்தான மேற்காணும் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள அரசாணையின் படி ஒற்றை சாளர ஒப்புதல் குழு உறுப்பினர்கள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1207/2023/எப்1)

**அலுவலகக் குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்.**

**அலுவலகக் குறிப்பு : பதிவுசெய்யப்பட்டது. தீர்மான எண்.1460**

53. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 18 - ல் நேரு வீதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான மயானத்தின் பராமரிப்பு மற்றும் நிர்வகித்தல் போன்றவற்றை கோபி உழவன் ரோட்டரி சங்கம் மேற்கொண்டு வருகிறது. இங்கு இறந்த உடல்களை அடக்கம் செய்தல் மற்றும் எரியூட்டும் பணி உள்ளிட்ட பணிகளை 01.02.2026 ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு கோபி உழவன் ரோட்டரி சங்கத்திடம் ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் : 101/2026/எச்1)

**அலுவலக குறிப்பு : மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.**

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1461**

54. தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு துணை முதலமைச்சர் மற்றும் இளைஞர் நலம் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களது தலைமையில் ஈரோடு IRTT கல்லூரியில் "டாக்டர் . கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் " விழாவிற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2425/பிஎஸ்3/2024 நாள். 26.12.2025 அறிவுறுத்தலின்படி கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளில் இருந்து தலா இரண்டு விளையாட்டு வீரர்கள் வீதம் மொத்தம் 60 நபர்கள் விழாவில் கலந்து கொள்ள அழைத்து செல்லப்பட்டது. இதற்கு விளையாட்டு வீரர்கள் 60 நபர்களுக்கு பனியன்கள் (T shirt ) வாங்கி அவர்களை பேருந்தில் அழைத்து சென்று டீ, பிஸ்கட் கொடுத்து விழாவில் கலந்து கொண்டு திரும்ப அழைத்து வரப்பட்டு உணவு வழங்க ஆகும் ஏற்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ– 29,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 13/2025/எச்1)

**அலுவலக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1462**

55. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 03, வீரபாண்டி கிராமம், வார்டு B, பிளாக் 23, நகரளவை எண். 63/1A1A, 63/4 இல் கோடீஸ்வரா நகர் அருகில் 5484.00 ச.மீ, அல்லது 1.35 ½ ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் உத்தேச 26 குடியிருப்பு மனைப்பிரிவுக்கு OOZGUVRW/25. TCP நாள்.18.08.2025 இணையதளம் வழியாக அனுமதி கோரி திரு. S. விஜயகுமார் அவர்களால் விண்ணபிக்கப்பட்டது. இதனையடுத்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு திட்ட அனுமதி ந.க.எண். SWP/DTCP/ERODE/ LAYOUT/ APPROVAL NO.263/2025, நாள்.26.08.2025, என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கி மனுதாரருக்கு அனுப்பப்பட்டும், இதன் மீது இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு உரிய மேல்நடவடிக்கை தொடர கோரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு, அவர்களால் அதன் நகல் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதனைதொடர்ந்து மனுதாரரால் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட தான பத்திரம் எண். 2719/2025 நாள்.25.08.2025 மற்றும் மின்வாரியத்திற்கான தான பத்திரம் எண். 2720/2025, நாள்.25.08.2025 ஆகியவைகளை நெ. 1 இணைசார்பதிவாளர் அலுவலகம் , கோபிசெட்டிபாளையம் அலுவலகத்தில் பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களை மனுதரரால் நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகரளவை ஆவணங்களில் வட்டாச்சியர் கோபிசெட்டிபாளையம் வட்டம் அவர்களின் நடவடிக்கைகள் டி.ஆர்.எண்.2025/10/31/000764 SD, நாள்.10.12.2025 அன்று ஆணையாளர் பெயருக்கு மாற்றம் செய்துள்ளார்,

சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதரரால் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரமானதாக உள்ளதா

என்பதை கண்டறிந்து. சான்று வழங்ககோரி பொறியியல் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. இதனையடுத்து, பொறியியல் பிரிவில் கீழ்காணும் விவரப்படி குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் தார்சாலை போடப்பட்டுள்ளது, மழைநீர் வடிகால் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளது. நகராட்சி மற்றும் மின் வாரியத்திற்கான பொது ஓதுக்கீடு இடங்களுக்கு தனித்தனியாக கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது, மேலும் மனுதரார் தெருவிளக்கு அமைப்பத்ற்கான பணியினை மின் வாரியத்தின் மூலம் மேற்கொள்ள ரூ.81,000 /- ஆணையாளர் பெயரில் 19.12.2025 அன்று மின்வாரியத்தின் இணையதளம் வழியாக கட்டணம் செலுத்தப்பட்ட ரசீது நகல் இணைத்து நடவடிக்கை எடுத்துள்ள கடிதம் இணைத்துள்ளார் என நகராட்சி பொறியாளர் அவர்கள் மூன்றாம் தரப்பினரின் மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளுக்கான 26.12.2025 ஆம் தேதியிட்ட தரச்சான்றிதழ் இணைத்து 06.01.2026 அன்று குறிப்பளித்துள்ளார். மேற்காண் பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 26 மனையிடங்களுக்கான காலியிட வரிகள் தனித்தனியாக விதிக்கப்பட்டு 2025/26 இரண்டாம் அரையாண்டு கட்டணங்கள் 13.12.2025 அன்று நகராட்சி கருவூலத்தில் செலுத்தி நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவிற்கான கட்டணங்கள் கீழ்கண்டவாறு மனுதராரால் 09.01.2026 இல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவு அனுமதி கட்டணம் | ரூ. 70,000/- |
| 2 | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் | ரூ.82,000/- |
| 3 | மனை அபிவிருத்தி கட்டணம் | ரூ.33,000/- |
| 4 | மனைப்பிரிவு வைப்புத் தொகை | ரூ.2,00,000/- |
| 5 | நில உபயோக மாற்று கட்டணம் நகராட்சி கணக்கில் | ரூ.30,000 |
| 6 | விளம்பர பலகை கட்டணம் | ரூ, 10,000/- |
| 7 | மழைநீர் சேகரிப்பு கட்டணம் | ரூ. 80,000/- |
| 8 | கொடிநாள் கட்டணம் | ரூ.26,000/- |
| 9 | தெருவிளக்குகள் கட்டணம் | ரூ,50,000/- |
| | மொத்தம் | ரூ,5,51,000/- |

எனவே மேற்காணும் விபரங்களின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதலின் பேரிலும் 06.01,2026 ஆம் நாளிட்ட பொறியில் பிரிவு குறிப்பின் படியும் , வீரபாண்டி கிராமம், வார்டு B, பிளாக் 23, நகரளவை எண். 63/1A. 1A, 63/4 இல் கோடீஸ்வரா நகர் அருகில் 5484.00 ச.மீ, அல்லது 1.35 ½ ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் உத்தேச 26 குடியிருப்பு மனைப்பிரிவுற்கு SWP/DTCP/ERODE/ LAYOUT/ APPROVAL NO.263/2025, என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்களுக்கு உட்பட்டும் நகராட்சியால் தெரிவிக்கப்படும் விபரங்களுக்கு உட்பட்டும் இறுதி மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2264/2025/எப்1)

**அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்**

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1463**

56. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01, லக்கம்பட்டி கிராமம், வார்டு B, பிளாக் 01, நகரளவை எண். 47/2 , பகுதியில் . மனுதரார் திரு. MMR. சரவணன் மற்றும் 4 நபர்கள் தமது 1.45 ¼ ஏக்கர் அல்லது 5886 ச.மீ, கொண்ட இடத்தில் 26 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுற்கு XBO61COV/2025/TCP நாள்.22.09.2025 இணையதளம் வழியாக அனுமதி கோரி திரு. MMR. சரவணன் மற்றும் 4 நபர்கள் ஆகியோரால் 15.09.2025 அன்று விண்ணப்பிக்கப்பட்டது. இதனையடுத்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு திட்ட அனுமதி ந.க.எண். SWP/DTCP/ERODE/ LAYOUT/ APPROVAL NO.313/2025, நாள்.30.09.2025, என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கி மனுதாரருக்கு அனுப்பப்பட்டும், இதன் மீது இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு உரிய மேல்நடவடிக்கை தொடர கோரி நகர்

ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு, அவர்களால் அதன் நகல் இவ்அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதனைதொடர்ந்து மனுதரரால் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட தான பத்திர எண். 3141/2025 நாள்.24.09.2025 மற்றும் மின்வாரியத்திற்கான தான பத்திர எண். 3142/2025, நாள்.24.09.2025 ஆகியவைகளை நெ. 1 இணைசார்பதிவாளர் அலுவலகம் , கோபிசெட்டிபாளையம் அலுவலகத்தில் பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களை மனுதரரால் நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகரளவை ஆவணங்களில் வட்டாச்சியர் கோபிசெட்டிபாளையம் வட்டம் அவர்களின் நடவடிக்கைகள் டி.ஆர்.எண்.2025/10/31/000768 SD, நாள்.31.12.2025 அன்று ஆணையாளர் பெயருக்கு மாற்றம் செய்துள்ளார்,

சாலைகள் மற்றும் பொது ஓதுக்கீடுகளை அக்கிகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதரரால் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரமானதாக உள்ளதா என்பதை கண்டறிந்து. சான்று வழங்ககோரி பொரியியல் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. இதனையடுத்து, பொரியியல் பிரிவில் கீழ்காணும் விவரப்படி குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் தார்சாலை போடப்பட்டுள்ளது, மழைநீர் வடிகால் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளது. நகராட்சி மற்றும் மின் வாரியத்திற்கான பொது ஓதிக்கீடு இடங்களுக்கு தனித்தனியாக கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது, மேலும் மனுதரார் தெருவிளக்கு அமைப்பத்ற்கான பணியினை மின் வாரியத்தின் மூலம் மேற்கொள்ள ரூ.2,12,880, /- ஆணையாளர் பெயரில் 06.01.2026 அன்று மின்வாரியத்தின் இணையதளம் வழியாக கட்டணம் செலுத்தப்பட்ட ரசீது நகல் இணைத்து நடவடிக்கை எடுத்துள்ள கடிதம் இணைத்துள்ளார் என நகராட்சி பொரியாளர் அவர்கள் மூன்றாம் தரப்பினரின் மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளுக்கான 23.12.2025 ஆம் தேதியிட்ட தரச்சான்றிதழ் இணைத்து 06.01.2026 அன்று குறிப்பளித்துள்ளார். மேற்காண் பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 26 மனையிடங்களுக்கான காலியிட வரிகள் தனித்தனியாக விதிக்கப்பட்டு 2025/2026 இரண்டாம் அரையாண்டு கட்டணங்கள் 28.12.2025 அன்று நகராட்சி கருவூலத்தில் செலுத்தி நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவிற்கான கட்டணங்கள் கீழ்கண்டவாறு மனுதரரால் 12.01.2026 இல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவு அனுமதி கட்டணம் | ரூ. 75,000/- |
| 2 | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் | ரூ.52,000/- |
| 3 | மனை அபிவிருத்தி கட்டணம் | ரூ.36,000/- |
| 4 | மனைப்பிரிவு வைப்புத் தொகை | ரூ.2,00,000/- |
| 5 | நில உபயோக மாற்று கட்டணம் நகராட்சி கணக்கில் | ரு.30,000 |
| 6 | விளம்பர பலகை கட்டணம் | ரூ, 10,000/- |
| 7 | மழைநீர் சேகரிப்பு கட்டணம் | ரூ. 80,000/- |
| 8 | கொடிநாள் கட்டணம் | ரூ.26,000/- |
| 9 | தெருவிளக்குகள் கட்டணம் | ரூ,50,000/- |
| மொத்தம் | | ரூ,5,59,000/- |

எனவே மேற்காணும் விபரங்களின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதலின் பேரிலும் 06.01,2026 ஆம் நாளிட்ட பொறியில் பிரிவு குறிப்பின் படியும் , லக்கம்பட்டி கிராமம், வார்டு B, பிளாக் 01, நகரளவை எண். 47/2 , பகுதியில் . மனுதரார் திரு. MMR. சரவணன் மற்றும் 4 நபர்கள் தமது 1.45 ¼ ஏக்கர் அல்லது 5886 ச.மீ, கொண்ட இடத்தில் 26 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுற்கு SWP/DTCP/ERODE/ LAYOUT/ APPROVAL NO.313/2025, என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்களுக்கு உட்பட்டும் நகராட்சியால் தெரிவிக்கப்படும் விபரங்களுக்கு உட்பட்டும் இறுதி மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2679/2025/எப்1)

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1464**

57. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டவாறு TURIP 2025-2026 ஆம் ஆண்டிற்கு சாலைப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.400/2026/SS1-4 நாள்: 06.01.2026-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) | நிர்வாக அனுமதி எண் |
|---|---|---|---|---|
| 1. | **Tamil Nadu Urban Roads Infrastructure Project (TURIP) 2025-2026**<br>**PACKAGE -I (2025-2026)**<br>Providing Bt Surface Jayaram Extension 0570020042, Karumaya Street 2 0570070193, Karumaya 3rd Street 057008r0200, Js Nagar 3rd Street 0570090238, Srl Nagar 057012r0381, Sri Nagar 1st Street 057012r0382, Pugazenthi Street To Saradha Mariayamman Koll 05701350024, Gokulam Garden 4th Cross Road 057019r0556, Zinning Factory Street - 2 0570220627, Muthusa Veethi -3 057022r0630, Annamalal Street 057022r0631, Soundhra Pandiyan Street 057022r0634, V.P. Main Road 057022r0638, Periyarthidal Back Side 057023r0657, Sakthi Nagar 2nd Street 057010r0250, Sakthi Nagar 1st Cross Street 0570100251, Sakthi Nagar 4th Cross Street 057010r0252, Sai Abirami Nagar 2nd Main Road 057010r0270, Sai Abirami Nagar 2nd Main Road Cross1 057010r0271, Sakthi Main Road To Min Nagar Last 057010r0290, NCN Garden Main Road 057011r0343, NCN Garden 1st Cross Road 057011r0344, Pasumai Nagar 1st Cross Street 057011r0347, Kalaignar Nagar 2nd Street 057011r0348, Pasumai Nagar 057011r0349, Sri Nagar 3rd Cross Street 057012r0385, Roja Nagar 1st Street 057014r0448, Roja Nagar 2st Street 057014r0449 In Ward No. 2,7,8,9,10,11,12,13,14,19,22,23 In Gobichettipalayam Municipality | 2.7413 | 170.00 | 400/2026 |
| 2. | **PACKAGE -II (2025-2026)**<br>Chinnasamy Street 2 (Part) 057004r0122, Kosalai Nagar, Third Street 057005r0163, Anjaneya Nagar Last Vaikkal Road 057010r0289, Kalyani Nagar 3rd Street 057014r0445, Kalyani Nagar 2nd Street (Part) 057014r189, Trr Nagar 5th Cross Street 057018r0538, Dhamu Nagar (Part) 057024r0665, Anna Nagar 057029s0077, Bajanai Koil Street -7 057030r0814, Sengottaiyan Colony, Sixth Street 057030r0831 In Ward No. 4,5,10,14,18,24,29,30 In Gobichettipalayam Municipality | 1.3782 | 103.00 | 400/2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | PACKAGE –III (2025-2026)<br>Veerasamy Street(A) (05701650032), Veerasamy Street(B) (05701610054), Veerasamy Street 8 (05701610055), Veerasamy Street 9 (05701610056), Veerasamy Street 10(05701610057), Veerasamy Street 4(057016r0495), Veerasamy Street 5(057016r0496), Veerasamy Street 3 (05701650033), Veerasamy Street 11(05701650035), Bajanai Koil Lane – 3 (057017s0038), Pajanai Kovil 2nd Sub Cross Lane (05701750039), Bajanai Koil Lane – 2 (057017s0040), Pajanal Kovil Lane (05701750041), Pajanai Kovil Street 1 (05701750042), Pajanai Kovil Lane (05701750043), Pajanai Kovil 1st Cross Street (05701750044), Jawaharlal Nehru Street 1 [A] (05701850052), Muruganan Street -2 (057020r0604), Periyar Road -2 (057029r0806), Sengottaiyan Colony, Second Street (0570300827), Segottaiyan Colony, Third Street (0570300828), Sengottaiyan Colony, Fifth Street (057030r0830) In Gobichettipalayam Municipality. | 1.763 | 127.00 | 400/2026 |
| | மொத்தம் | 5.882 | 400.00 | 400/2026 |

<u>நிதி விவரம்</u>

மொத்த மதிப்பீட்டு தொகை : ரூ.400.00 இலட்சம்
TURIP மாநில அரசு நிதி : ரூ.387.00 இலட்சம்
நகராட்சி நிதி : ரூ.13.00 இலட்சம்

மேற்படி பணியின் செலவினத்தில் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.13.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1 அனுமதிக்கப்பட்டது. 2 பதிவுசெய்யப்பட்டது. தீர்மான எண்.1465**

58. இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினமும் 18 MT திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு 12 MT மட்கும் கழிவுகள் 3 நுண் உரமாக்க செயலாக்க மையங்களில் இயற்கை உரமாக தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட 12 MT மட்கும் குப்பைகளை உரமாக்க மாட்டுச்சாணம் அவசியம் தேவைப்படுகிறது. இந்நகராட்சியானது விவசாய நிலங்களை உள்ளடக்கி உள்ளதால் மாட்டுச்சாணம் இலவசமாக கிடைப்பதில்லை. எனவே, மாட்டுச்சாணம் அவசியம் தேவைப்படுவதால் டன் ஒன்றிற்கு ரூ. 1300/- வீதம் 50 டன்னிற்கு ரூ. 65,000/-ம் உத்தேச செலவினத்திற்கும், இச்சாணத்தை தேவையின் அடிப்படையில் அவ்வப்போது வாங்கி பயன்படுத்தி கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :– 1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1466**

59. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகளை வெளிக்கொணர்வு முறை மூலம் தூய்மை பணியாளர்களை கொண்டு பணியினை மேற்கொள்ள ஏற்கனவே நகர்மன்றம் தீர்மான எண். 1285 நாள். 31.07.2025 இல் அனுமதி வழங்கி பணிகளை மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் 30.04.2026 ஆம் தேதியுடன் முடிவடைவதால், ஏற்கனவே பணியினை

மேற்கொண்டு வரும் நிறுவனத்தினரிடமிருந்து இப்பணியின் ஒப்பந்த காலத்தினை நாள் ஒன்றுக்கு ரூ.775/– வீதம் 19 தூய்மை பணியாளர்களுக்கு 01.05.2026 முதல் 155 பள்ளி வேலை நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.23.00/– இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.800/2025/எச்1)

**அலுவலக குறிப்பு : – 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1467**

60. தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் மொடச்சூர் வாரச்சந்தையில் செயல்பட்டு வரும் வீடற்றவர்களுக்கான தங்கும் விடுதி தற்பொழுது M/s. Atchayam Trust, Erode என்னும் தன்னார்வ அமைப்பினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி அமைப்பிற்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மானம் எண் 1108 நாள் 31.03.2025 ல் அனுமதி வழங்கப்பட்ட காலம் 31.01.2026 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் M/s. Atchayam Trust, Erode அவர்கள் மேற்படி விடுதியினை பராமரிப்பதற்கான அனுமதி காலத்தினை 01.02.2026 ஆம் தேதி முதல் நீட்டித்து, மேற்படி இல்லத்தில் தங்கியுள்ள வீடற்றவர்களின் நலன் கருதி தங்கும் விடுதியின் பராமரிப்பு பணியினை 01.02.2026 முதல் ஓராண்டு காலத்திற்கு M/s. Atchayam Trust, Erode அவர்களுக்கு கால நீட்டிப்பு செய்து தர மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –** மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1468**

61. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல், புகை மருந்து தெளித்தல், நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண். 1261 நாள். 30.06.2025 இல் அனுமதி வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இப்பணியின் ஒப்பந்தகாலம் 31.03.2026 ஆம் தேதியுடன் முடிவடைவதால், ஏற்கனவே பணியினை மேற்கொண்டு வரும் நிறுவனத்தினரிடமிருந்து 37 பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணியினை 01.04.2026 முதல் 30.09.2026 வரை ஒப்பந்த காலத்தினை காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.583/– என்னும் விலை விகிதத்தில் 37 பணியாளர்களுக்கு ஆகும் செலவினம் ரூ. 33.65/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :– 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1469**

62. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் காலியாக உள்ள மூன்று தட்டச்சர் பணியிடங்களுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.8077/2025/எ2 நாள்.26.05.2025 இன் மாவட்ட ஆட்சியர் அறிவிக்கையின் படி தினக்கூலி பணி ரூ.723/– என்கின்ற ஊதிய அடிப்படையில் 01.01.2026 முதல் 30.06.2026 வரை ஏற்கனவே குறிப்பிட்டுள்ள படி உள்ளூர் சுய உதவிக்குழு மூலம் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. (ந.க.எண்.10/2025/சி1)

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வழங்கப்பட்ட விலை விகிதம் (நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சித்தி விநாயகர் மகளிர் சுய உதவிக்குழு கோபிசெட்டிபாளையம் | ரூ.750/- |
| 2 | அன்னை சந்தியா மகளிர் சுய உதவிக்குழு கோபிசெட்டிபாளையம் | ரூ.705/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள அன்னை சந்தியா மகளிர் சுய உதவிக்குழுவின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1470**

63. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாகத்தின் தரைதள கூரையின் மேல்தளத்தில் மின்னணு விளம்பரத்திரை (6.70 மீ X3.35 மீ) என்ற அளவில் விளம்பரம் செய்வதற்கு திரை அமைக்க ஏதுவாக கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை உறுதியாக உள்ளதென நகராட்சி பொறியாளர் அவர்களால் சான்றளிக்கப்பட்டுள்ளது. எனவே, மின்னணு விளம்பரத்திரையினை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய மேற்கூரையில் அமைத்திட திரு. K.A. குமரகுருபர், என்கின்ற விண்ணப்பதாரர்க்கு தடையில்லா சான்று விதிகளின் படி வழங்கிட நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2557/2025/எப்1)

**அலுவலக குறிப்பு :– 1.** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023 விதி 320 –ன் படி நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் என்பதால் தகுதிவாய்ந்த அலுவலரால் ஆட்சேபனை இல்லா சான்று வழங்கலாம். மேலும் மனுதாரரால் வழங்கப்படும் விண்ணப்பம் விதிமுறைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் விதி எண் 322–ல் தெரிவித்துள்ள ச.மீ அளவுக்கேற்ப்பவும், மேலும் விதி எண் 333 – ல் குறிப்பிட்டுள்ளவாறு நகராட்சிக்கு வருடத்திற்கு மின்னணு விளம்பரத்திரையின் ச.மீ அளவிற்கு ரூ.3000/– மற்றும் LED/LCD விளம்பரம் மற்றும் மாறக்கூடிய செய்தியிடல் சாதனங்களுக்கு 20% அதிகரித்தும் நிர்ணம் செய்திடலாம்.
3. மின்னணு விளம்பரத்திரையின் அளவான 6.70 மீX 3.35 மீ = 22.445 ச.மீ அளவிற்கு ரூ. 3600 என கணக்கிட்டால், ரூ.80802 வருடத்திற்கு நகராட்சிக்கு வருவாய் அதிகரிக்கும்.

**அலுவலகக் குறிப்பு : 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1471**

64. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் தற்பொழுது உள்ள 106 – கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 51 பாகங்களில் SIR படிவங்கள் பொதுமக்களிடம் பெறப்பட்டு வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் No Mapping மற்றும் Logical Discrepancy போன்ற பணிகள் மேற்கொள்ள அதற்குரிய படிவங்கள் பதிவிறக்கம் செய்யவும், அதன் தொடர்புடைய பணிகளை வெளிக்கொணர்வு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளவும், அதற்கு ஏதுவாக ரூ.2.00 இலட்சம் தேர்தல் செலவினங்கள் பொதுநிதியில் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.656/2021/எப்1)

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1472**

65. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30 செங்கோட்டையன் காலனியில் உள்ள சமுதாய கழிப்பறைக்கு போர் வெல் அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பகுதியில் போர் வெல் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1473**

66. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 கரட்டூர் நுண்ணுயிர் உரமாக்கல் மையம் (MCC) –க்கு போர் வெல் அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பகுதியில் போர் வெல் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1474**

67. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 கரட்டூர் நுண்ணுயிர் உரமாக்கல் மையம் (MCC) – இல் பணிபுரியும் இரவுக்காவலருக்கு குடியிருப்பு அறை அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1475**

68. **நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

கோபிசெட்டிபாளையத்தில் 22.02.1917 ஆம் ஆண்டு பிறந்து வாழ்கின்ற காலத்தில் தன்நலன் கருதாது வாழ்ந்து சென்ற, 02.01.2011ல் இல்வுலகை விட்டுமறைந்தாலும், இந்நகரமக்களின் மனதில் என்றும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருப்பவரும் தான் வாழ்ந்த காலத்தில், இந்நகராட்சி பகுதிகளில் உள்ள அநேக பள்ளி கூடங்கள், ஐ.டி.ஐ கல்வி நிறுவனம், தாழ்த்தப்பட்டோருக்கான உண்டு உறைவிட பள்ளியுடன் கூடிய விடுதிகள், அரசு அலுவலகங்கள், இந்நகராட்சி தலைமை குடிநீர்நிலையம், இந்நகராட்சி கட்டிடம் ஆகியவற்றிக்கான இடங்களை தனது பூர்விக சொத்துகளின் நிலங்களை தானமாக வழங்கியவர், இந்திய திருநாட்டின் விடுதலைக்காகவும், ஏற்றதாழ்வின்றி அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்காகவும் தனது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவரும், அண்ணல் மகாத்மா காந்தி அவர்களின் சீடரும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நெருங்கிய நண்பரும், இந்நகராட்சியில் 1952 முதல் 1955 வரை மற்றும் 1986 முதல் 1991 வரை நகர்மன்ற தலைவராக பணியாற்றிய காலத்தில் மனித கழிவுகளை மனிதனே அகற்றும் முறையினை ஒழித்து சாதனை படைத்து குடியரசு தலைவரின் விருதினை பெற்று சிறப்புடன் பணியாற்றியவரும் மறைந்த சுதந்திர போராட்ட தியாகியுமான பெருந்தகையாளர் திரு.G.S.இலட்சுமண ஐயர் அவர்கள் பெயரினை இந்நகர பொதுமக்கள், மற்றும் வணிகர்கள் நினைவு கூறும் வகையில் கோபிசெட்டிபாளையம் நகராட்சி மொடச்சூர் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வாரச்சந்தை வணிக வளாகத்திற்கு "சுதந்திர போராட்ட தியாகி திரு.**G.S.**இலட்சுமண ஐயர் வாரச்சந்தை வணிக வளாகம்" என பெயர் வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் வழியாக அரசிற்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.62/2026/எப்1)

**அலுவலக குறிப்பு:–** நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023 விதி 129 ன் படி மன்றமானது அரசின் ஒப்புதலுடன் மட்டுமே புதிய நகராட்சி சொத்துகளுக்கு பெயரிடலாம், என்பதால் இந்நேர்வு குறித்து அரசுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக செயற்குறிப்பு அனுப்பலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1476**

69. கோபிசெட்டிபாளையம் நகராட்சி 77 வது குடியரசு தினவிழா 2026 ஜனவரி 26 இல் கொண்டப்பட உள்ளதால், விழாவிற்கு தேவையான கீழ்கண்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. விழாவிற்கு தேவையான அழைப்பிதழ், விழா மேடை, அலங்கார பந்தல், கொடி, தோரணம், ஒலி + ஒளி அமைப்பு, காலை சிற்றுண்டி, நகராட்சி பள்ளி மாணவ மாணவியர்களுக்கு (மாநில/மாவட்ட அளவில்) வெற்றி பெற்றவர்களுக்கு நினைவு பரிசு, பாராட்டு சான்றிதழ் சிறப்பு விருந்தினர்கள்/நகர்மன்ற உறுப்பினர்கள் சிறப்பு செய்தல் சால்லை/மாலை/நினைவு பரிசுகள் தேநீர், விருந்து மற்றும் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் பயிற்ச்சி பெற்று அரசு பணி பெற்ற மாணவ – மாணவியருக்க நினைவு பரிசு/பாராட்டு விழா புகைப்படங்கள் ஏற்பாடு செய்ய ஆகும் செலவினம் ரூ.1,51,000/– ஆகும். (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தி ஓராயிரம் மட்டும்)

அலுவலக குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்த மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1477

70. இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு படிகாரம் (Alum) 5டன் தேவைப்படுவதால் படிகாரத்தை பெறுவதற்கு உத்தேச செலவினமாக ரூ.1,35,000/– ஆகும். இந்த செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்
2, செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்

அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1478

(ஒப்பம்)– என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்.
கோபிசெட்டிபாளையம் நகராட்சி